முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2018 யூலை

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2018-07-22
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களுக்குத்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

தனிப்பட்ட நிதித் திட்டமிடலானது, ஒரு தனிநபரின் அல்லது குடும்ப அலகொன்றின் நாணய ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் தேவைகளுக்காக நிதித் தத்துவங்களின் பிரயோகம் சம்பந்தப்பட்டதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தனிப்பட்ட நிதித் திட்டமிடலின் அனுகூலங்கள் இரண்டு (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) தனிப்பட்ட நிதித் திட்டமிடலின் அடிப்படை நியதிகள் (basic rules) மூன்று (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

பணத்திற்கான பெறுமதி (value for money) என்பது பயன்படுத்துநரின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சகல கிரயம் மற்றும் தரங்களின் உத்தமச் சேர்க்கையாகும். இதனைச் சிக்கனம் (economy), வினைத்திறன் (efficiency) மற்றும் விளைவுத்திறன் (effectiveness) ஆகியவற்றைப் பயன்படுத்தி மதிப்பிடலாம்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

பணத்திற்கான பெறுமதி தொடர்பாக சிக்கனம், வினைத்திறன் மற்றும் விளைவுத்திறன் எனும் பதங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட லொஜிக் கம்பனி** தனது வியாபார வருமதி மீதிகளை மதிப்பாய்வு செய்கின்றது. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2016 மார்ச் 31, 2017 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| ஆண்டு முடிவு / திகதியில் | 2016 மார்ச் 31 | 2017 மார்ச் 31 | 2018 மார்ச் 31 |
|---|---|---|---|
| வியாபார வருமதிகள் | 29,200,000 | 45,600,000 | 60,800,000 |
| விற்பனை | 263,000,000 | 340,000,000 | 332,500,000 |
| விற்பனைக் கிரயம் | 110,460,000 | 136,000,000 | 142,975,000 |

*(ஒரு ஆண்டில் 360 நாட்கள் எனவும் சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2017 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலத்தை (நாட்களில்) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) மேலே (a) யில் உமது கணிப்பீட்டில் அவதானிக்கப்பட்ட தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு வியாபார வருமதிகளை முகாமை செய்வதற்கு இரண்டு (02) தந்திரோபாயங்களைக் **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட செரமிக்ஸ்** அதன் கிரம வாடிக்கையாளருக்கு உயர்திறன்மிக்க ஊழியர் மற்றும் திறனற்ற ஊழியர்களைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள் **P** இனை உற்பத்தி செய்கின்றது. கம்பனியானது பொருள் **P** யிற்கான ஒரு மாத காலத்தில் நிறைவுசெய்ய வேண்டிய பாரிய கணியமொன்றிற்கு ஒரு விசேட கட்டளையைப் பெற்றுள்ளதுடன், அந்த விசேட கட்டளைக்கான ஊழியர் தேவைப்பாடுகள் கீழ்வருமாறு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| திறன்மிக்க ஊழிய மணித்தியாலம் | 14,500 மணித்தியாலம் |
| திறனற்ற ஊழிய மணித்தியாலம் | 41,600 மணித்தியாலம் |

தற்போதுள்ள திறன்மிக்க ஊழியர்களுக்கு மாதமொன்றிற்கு 20,000 மணித்தியாலங்கள் வழங்குகின்ற உடன்படிக்கையுடன் மணித்தியாலமொன்றிற்கு ரூ. 800/- வீதம் வழங்கப்படுகிறது. மேலதிக திறன்மிக்க ஊழிய மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுமிடத்து அது மேலதிக நேர வேலையாகக் கருதப்படுவதுடன் அதற்கு வழமையான மணித்தியால வீதத்தின் 1.5 மடங்கு மேலதிக நேரக் கொடுப்பனவாகச் செலுத்தப்படும். மாதமொன்றில் கிரமமான (வழமையான) வேலைகளுக்குத் தேவைப்படும் திறன்மிக்க ஊழிய மணித்தியாலம் 9,500 மணித்தியாலங்கள் ஆகும்.

தற்போதுள்ள திறனற்ற ஊழியர்களுக்கு மணித்தியாலத்திற்கு ரூ.500/- வீதம் மாதமொன்றிற்கு 120,000 மணித்தியாலங்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட கொடுப்பனவு ஒன்று வழங்கப்படுகிறது. அத்துடன் உண்மையாக வேலை செய்யும் திறனற்ற ஊழிய மணித்தியாலங்களுக்கு மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.25/- வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. திறனற்ற ஊழியர் பற்றாக்குறை ஏற்படின், புதிய ஊழியர்கள் மணித்தியாலமொன்றிற்கு ரூ.300/- வீதம் வாடகைக்கு அமர்த்தப்படுவர். உத்தரவாதமளிக்கப் பட்ட கொடுப்பனவுக் காலத்தில் மாதமொன்றிற்கு 68,000 மணித்தியாலம் வேலையின்றி (idle) இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற மாதமொன்றிற்கான திறனற்ற ஊழிய மணித்தியாலங்கள் இந்த விசேட கட்டளைக்காகப் பயன்படுத்தப்பட முடியும். திறனற்ற ஊழியர்கள் மேலதிக நேர வேலைக்கு உரித்துடையவர்கள் அல்ல.

**நீங்கள் செய்யவேண்டியது :**

விசேட கட்டளைக்கான ஊழியர்களின் தொடர்புபட்ட கிரயத்தினைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட பேகர்ஸ் கம்பனியானது** பல்பொருள் அங்காடிகளூடாக விற்பனை செய்வதற்கு சில வகை கேக்குகளை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகின்றது. உற்பத்தி செய்யவேண்டிய கணியங்களைத் தீர்மானிக்கும் செயன்முறையில் முகாமை இப்போது ஈடுபட்டுள்ளது. உற்பத்திப் பிரிவானது 1, 2 அல்லது 3 வேலை மாற்ற நேரங்களை (shifts) ஒழுங்குபடுத்தக்கூடியதாக இருப்பதுடன் அவற்றின் மாதாந்த உற்பத்திகள் முறையே 10,000 பெட்டிகள், 20,000 பெட்டிகள் மற்றும் 30,000 பெட்டிகளாகும்.

பெட்டியொன்றின் விற்பனை விலை ரூ. 450/- ஆகவும் பெட்டியொன்றிற்கான மொத்த மாறும் கிரயம் ரூ.190/- ஆகவும் உள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட மாதத்தினுள் விற்பனை செய்யப்படாத பெட்டிகள் ஒடிவுப் பொருளாக, பெட்டியொன்று ரூ. 5/- விலையில் விற்கப்பட முடியும்.

இந்தப் பெட்டிகளுக்கான மாதாந்தக் கேள்வியானது தாழ்வானபோது 8,000 பெட்டிகளாகவும் சராசரியாக உள்ளபோது 17,500 பெட்டிகளாகவும் உயர்வானபோது 26,000 பெட்டிகளாகவும் இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்படித் தீர்மானங்களுக்கான பங்களிப்புகளைக் காட்டும் விளைவாய்வு அட்டவணையைத் (payoff table) **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) மிகை – மிகை (Maximax) மற்றும் மிகை –குறை (maximin) அடிப்படை நியதிகளை (criterion) / தீர்வுகளை (solutions) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**எலக்ரோ PLC** ஆனது இலத்திரனியல் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. வழங்குநர் ஒருவர் **எலக்ரோ PLC** யினை அணுகி, **உற்பத்திப் பொருள் X** இனை ஒரு உருப்படி ரூ. 950/- விலையில் தருவதற்கு முன்வந்துள்ளது.

**பொருள் X** வழமையாக உள்ளகரீதியாகவே (internally) உற்பத்தி செய்யப்படுவதுடன் அதன் கிரயக் கட்டமைப்பு கீழ்வருமாறு :

| | **ரூ.** |
|---|---:|
| அலகொன்றிற்கான பொருட்கள் | 150 |
| திறன்மிக்க ஊழியர் அலகொன்றிற்கு (1 மணித்தியாலம், மணித்தியாலமொன்றுக்கு ரூ. 300/- வீதம்) | 300 |
| திறனற்ற ஊழியர் அலகொன்றிற்கு (2 மணித்தியாலங்கள், மணித்தியாலமொன்றுக்கு ரூ. 200/- வீதம்) | 400 |
| அலகொன்றிற்கான மாறும் உற்பத்தி மேந்தலைகள் (திறன்மிக்க மற்றும் திறனற்ற ஊழிய மணித்தியாலத்திற்கு ரூ. 75/- வீதம்) | 225 |
| ஆண்டிற்கான குறிப்பிட்ட நிலையான மேந்தலைகள் | 16,250,000 |
| ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலையான மேந்தலைகள் | 7,836,000 |

**பொருள் X** தொடர்பில் கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

**பொருள் X** வெளியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்படின் :

- குறிப்பிட்ட நிலையான மேந்தலைகளின் 60% ஐச் சேமிக்க முடியுமெனவும் ஒதுக்கப்படும் நிலையான மேந்தலைகள் ஏனைய பிரிவுகளுக்கு ஒதுக்கப்படலாம் எனவும் மதிப்பிடப்படுகிறது.
- திறன்மிக்க ஊழியர்கள் வேறு பிரிவுகளுக்கு வேறு செயன்முறைகளுக்காக மாற்றப்படக்கூடியதாக உள்ளதுடன் திறனற்ற ஊழியர்கள் மொத்தம் ரூ. 15 மில்லியன் நஷ்டஈடு கொடுத்து பணியிலிருந்து நீக்கப்படலாம்.

- வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்படும் வெளிமூலமிடப்பட்ட (outsourced) பொருட்களின் தரத்தினைக் கண்காணிப்பதற்காக, கம்பனியானது மாதமொன்றிற்கு ரூ. 450,000/- கிரயத்தில் மேலதிக ஊழியர் ஒருவருடன் அதன் பரீட்சிப்புப் பிரிவைப் பலப்படுத்துதல் வேண்டும்.
- உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாது என்பதால் ரூ. 2,900,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டு இருப்பிலுள்ள சில மூலப்பொருட்களும் கருவிகளும் ரூ. 1,186,000/- க்கு விற்பனை செய்யப்பட முடியும்.
- அடுத்த ஆண்டிற்கு **எலக்ரோ PLC** க்கு **பொருள் X** இல் 145,000 அலகுகள் தேவைப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**பொருள் X** இனை வெளிவாரி வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யவேண்டுமா என **மதிப்பிடுக.**

(உமது விடைகளைத் தேவையான கணிப்பீடுகளுடன் தருக) (10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட MFD** கம்பனி **பொருள் Q** வினை உற்பத்திசெய்து விற்பனை செய்வதுடன், கீழ்வரும் தகவல்கள் 2018 யூன் மாதத்திற்காக கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) **பொருள் Q** வின் நியமக் கிரய அட்டையும் நியம விற்பனை விலையும் கீழ்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| நேர் மூலப்பொருள் **A** (கி.கிராம் ரூ. 550/- வீதம் 2 கி.கிராம்) | 1,100 |
| நேர் மூலப்பொருள் **B** (லீட்டர் ரூ. 400/- வீதம் 1.5 லீட்டர்) | 600 |
| நேர் கூலி (மணித்தியாலம் ரூ. 300/- வீதம் 0.5 மணித்தியாலம்) | 150 |
| மாறும் உற்பத்தி மேந்தலை (மணித்தியாலம் ரூ. 160/- வீதம்) | 80 |
| மொத்த மாறும் உற்பத்திக் கிரயம் (அலகொன்றிற்கு) | 1,930 |
| விற்பனை விலை (அலகொன்றின்) | 2,500 |

(2) மாதத்திற்கான பாதிடப்பட்ட விபரங்கள் :

| | |
|---|---|
| நிலையான உற்பத்தி மேந்தலை (ரூ.) | 18,500,000 |
| மாறும் விற்பனைப் பணிசை (விற்பனைப் பெறுமதியின் சதவீதமாக) | 3% |
| 2018 யூன் மாத பாதிடப்பட்ட உற்பத்தியும் விற்பனையும் (அலகுகள்) | 60,000 |

(3) 2018 யூன் மாதத்தில் பொருள் **Q** வின் 58,400 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டு அலகொன்று ரூ.2,520/- விலையில் விற்பனை செய்யப்பட்டன. இந்தக் காலத்திற்கான உண்மையான கிரயத் தகவல்கள் கீழ்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| நேர் மூலப்பொருள் **A** | 66,860,000 |
| நேர் மூலப்பொருள் **B** | 37,825,000 |
| நேர் கூலி | 8,765,200 |
| மாறும் உற்பத்தி மேந்தலை | 4,980,000 |
| மாறும் விற்பனைப் பணிசை | 4,360,000 |
| நிலையான உற்பத்தி மேந்தலை | 19,050,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் தெளிவாகக் காட்டி, தொழிற்பாட்டுக் கூற்றினைத் (Operating Statement) **தயாரிக்குக**:

- 2018 யூன் மாதத்திற்கான பாதீடு (Budgeted figures)
- 2018 யூன் மாதத்திற்கான உண்மைப் பெறுபேறுகள் (Actual figures)
- பாதீட்டிற்கும் உண்மைப் பெறுபேறுகளுக்குமிடையிலான வித்தியாசங்கள் (Variation)

(10 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) **எக்ஸ்பான்ட் PLC** ஆனது கொழும்பு பங்குப் பரிமாற்றச் சந்தையில் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி ஆகும்.

**எக்ஸ்பான்ட் PLC** யின் மூலதனக் கட்டமைப்புப் பற்றிய கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) கம்பனி பங்கொன்று ரூ. 10/- விலையில் வழங்கப்பட்ட 8.5 மில்லியன் சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளது. இந்தப் பங்குகள் தற்போது பங்கொன்று ரூ. 50/- விலையில் கொடுக்கல் வாங்கலுக்கு உள்ளாகின்றன. உடன்முடிவடைந்த ஆண்டில் பங்கொன்றுக்கு ரூ. 6.50 வீதம் பங்கிலாபம் வழங்கப்பட்டது. சாதாரண பங்குகள் மீதான பங்கிலாபம் ஆண்டிற்கு 5% இனால் வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) ஆரம்பத்தில் பங்கொன்று ரூ.10/- வீதம் வழங்கப்பட்ட மீட்கப்பட முடியாத 2,437,500 முன்னுரிமைப் பங்குகள் உள்ளன. முன்னுரிமைப் பங்குகளின் தற்போதைய சந்தை விலை பங்கொன்று ரூ. 12 ஆகும். முன்னுரிமைப் பங்குகள் மீது ஆண்டிற்கு ரூ. 1.20 பங்கிலாபம் செலுத்தப்படும்.

(3) கம்பனி தனிச்சமொன்று ரூ. 100 சமப் பெறுமதியைக் கொண்ட 1 மில்லியன் 10.8 % மீட்கப்பட முடியாத தனிச்சங்களைக் கொண்டுள்ளது. இந்தத் தனிச்சங்களின் தற்போதைய சந்தை விலை தனிச்சம் ஒன்று ரூ. 84/- ஆகும்.

*(வரியீட்டினைத் தவிர்க்குக)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்பட முடியாத தனிச்சங்களின் கிரயம் (02 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(B) **ABC PLC** புதிய பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காக புதிய தொழிற்சாலைக் கட்டடத் தொகுதியொன்றில் ரூ. 130 மில்லியனை முதலீடு செய்ய எண்ணுகிறது. இதில் ரூ. 122 மில்லியன் பொறி மற்றும் எந்திரத்திலும் ரூ. 8 மில்லியன் தொழிற்படு மூலதனத்திலும் (working capital) முதலீடு செய்யப்படும். புதிய தொழிற்சாலை அடுத்த 5 ஆண்டுகளில் கீழே காட்டியவாறு உற்பத்தி இயல்வலுவையும் விற்பனையையும் அதிகரிக்க உதவும்.

| ஆண்டு | உற்பத்தியும் விற்பனையும் (‘000 அலகுகளில்) |
|---|---|
| 1 | 1,100 |
| 2 | 1,600 |
| 3 | 2,200 |
| 4 | 2,400 |
| 5 | 2,500 |

ஆண்டு 1 இல் அலகொன்றின் விற்பனை விலை ரூ. 220/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை 8 % இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டு 1 இல் அலகொன்றின் மாறும் கிரயம் ரூ. 160/- ஆக இருக்குமென்பதுடன் ஆண்டு 1 இல் நிலையான கிரயம் ரூ. 60 மில்லியன் ஆக இருக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. சகல கிரயங்களும் ஆண்டிற்கு 5 % இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொறி மற்றும் எந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள். கம்பனி பொறி மற்றும் எந்திரத்தினை 5 ஆண்டுகள் ஈறாக நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்கின்றது. கம்பனி வரித் தேவைகளுக்காக இந்தப் பொறி மற்றும் எந்திரம் மீது ஆண்டிற்கு 25 % மூலதனப் படியை (capital allowances) கோர முடியும்.

தொழிற்படு மூலதனம் ரூ. 8 மில்லியன் ஆண்டு 5 இன் இறுதியில் மீளப் பெறப்பட முடியும்.

கம்பனி ஆண்டிற்கு 30% இல் வருமான வரி செலுத்துவதுடன் ஆண்டிற்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு அதே ஆண்டில் செலுத்தப்படும்.

கம்பனியின் மூலதனக் கிரயம் 15 % ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 5 ஆண்டுகளுக்கான நிகரக் காசுப் பாய்வுகளைக் **கணிக்குக.** (08 புள்ளிகள்)

(b) இந்த முதலீட்டின் நிகர இற்றைப் பெறுமதியினைக் (NPV) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(c) முதலீட்டின் அக விளைவு வீதத்தினைக் (IRR) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(d) **ABC PLC** இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டுமா, இல்லையா என காரணங்களுடன் **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) ***வரையறுக்கப்பட்ட X கம்பனி*** ஏற்றுமதிச் சந்தைக்காக பொருள் **Y** இனை உற்பத்தி செய்கின்றது. பின்வரும் நியமக் கிரய அட்டையும் நியம விற்பனை விலையும் கம்பனியின் பதிவுகளிலிருந்து பிரித்தறியப்பட்டுள்ளன :

| | **ஒரு அலகிற்கு (ரூ.)** |
|---|---|
| நேர் பொருட்கள் : | |
| **பொருள் X1** (கி.கிராம் ஒன்று ரூ. 150 விலையில் 1.50 கி.கிராம்) | 225 |
| **பொருள் X2** (கி.கிராம் ஒன்று ரூ. 350/- விலையில் 4 கி.கிராம்) | 1,400 |
| நேர் கூலி (மணித்தியாலத்திற்கு ரூ. 250/- வீதம் 3 மணித்தியாலம்) | 750 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலத்திற்கு ரூ. 120/- வீதம் 3 மணித்தியாலம்) | 360 |
| மொத்த மாறும் கிரயம் | 2,735 |
| விற்பனை விலை | 3,000 |
| **பங்களிப்பு** | **265** |

2018 மே மாதத்திற்கான பாதிடப்பட்ட உற்பத்தி / விற்பனை அலகுகள் - 11,000 அலகுகள்.

2018 மே மாதத்திற்கான உண்மையான பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| உண்மையான உற்பத்தி / விற்பனை | (அலகுகள்) | 11,300 |
| விற்பனை | (ரூ.) | 34,804,000 |
| நேர் பொருட்கள் : | | |
| **பொருள் X1** (கி.கிராம் ரூ. 145 விலையில் 18,600 கி.கிராம்) | (ரூ.) | 2,697,000 |
| **பொருள் X2** (கி.கிராம் ரூ. 375/- விலையில் 44,100 கி.கிராம்) | (ரூ.) | 16,537,500 |
| நேர்கூலி கிரயம் (மணித்தியாலமொன்று ரூ.260/- வீதம் 33,500 மணித்தியாலம்) | (ரூ.) | 8,710,000 |
| மாறும் மேந்தலைகள் | (ரூ.) | 4,422,000 |

கம்பனியால் ஏற்கனவே கணிப்பிடப்பட்ட சில முரண்கள் கீழ்வருமாறு :

| | **ரூ.** | |
|---|---|---|
| நேர் பொருள் விலை முரண் | 1,009,500 | (பாதகம்) |
| நேர் கூலி கிரய முரண் | 235,000 | (பாதகம்) |
| நிலையான மேந்தலை செலவின முரண் | 6,400 | (சாதகம்) |
| மாறும் மேந்தலைக் கிரய முரண் | 354,000 | (பாதகம்) |
| விற்பனை விலை முரண் | 904,000 | (சாதகம்) |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக.**

(i) நேர் பொருள் கலவை முரண் (Direct Material Mix Variance) (04 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் விளைவு முரண் (Direct Material Yield Variance) (04 புள்ளிகள்)

(iii) விற்பனைக் கனவளவு எல்லை முரண் (Sales Volume Margin Variance) (02 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மைப் பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்யும் தொழிற்பாட்டுக் கூற்றினைத் (operating statement) **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ஹெல்த் அப் கம்பனியானது** இரு சுவைகளைக் கொண்ட (அன்னாசி மற்றும் ஸ்ரோபரி) போசாக்குத் தானியப் பொதிகளை அறிமுகப்படுத்த எண்ணுகிறது. இவை ஒவ்வொன்றும் 6 பொதிகளைக் கொண்ட பெட்டிகளில் விற்பனை செய்யப்படும். இரு வகை உற்பத்திப் பொருட்கள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு :

| | **அன்னாசி** | **ஸ்ரோபரி** |
|---|---|---|
| பெட்டியொன்றின் விற்பனை விலை (ரூ.) | 1,080 | 1,640 |
| பெட்டியொன்றிற்கு நேர் பொருள் (ரூ.) | 390 | 542 |
| பெட்டியொன்றிற்கு நேர் கூலி (ரூ.) | 150 | 180 |
| பெட்டியொன்றிற்கு மாறும் உற்பத்தி மேந்தலை (ரூ.) | 90 | 108 |
| மாதத்திற்கான விற்பனை (பெட்டிகள்) | 2,000 | 1,000 |

மாதத்திற்கான நிலையான உற்பத்தி மேந்தலையும் நிலையான உற்பத்தி சாராத மேந்தலையும் முறையே ரூ. 1,625,000/- மற்றும் ரூ. 461,200/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இணைந்த இலாப – கனவளவு விகிதத்தினை (combined profit volume ratio) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒவ்வொரு வகையான உற்பத்திகளுக்கும் மாதாந்தச் சமப்பாட்டு மட்டங்களை (break-even levels) வெவ்வேறாகக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *C* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |